12th November 1957]

Assembly Sessions in Ootacamund.

* 140-A *Q.*—Sri J. MATHA GOWDER and Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have purchased any building in Ootacamund to convene a meeting of the Assembly in summer, and if so, at what cost?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Government are considering the purchase of the entire Aranmore Palace at Ootacamund. The question as to the use to which the building should be put has not yet been decided by Government. The matter is still in the stage of negotiation.

Sri N. K. PALANISAMI : அந்தக் கட்டிடத்தின் விலை என்ன ? அதை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வளவு ஆகும் என்பதற்கு சர்க்கார் ஏதாவது எஸ்டிமேட் போட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இன்னும் விலை முடிவாகவில்லை. அவர்கள் ஒரு விலை சொல்லியிருக்கிறார்கள். நாம் ஒரு விலை சொல்லியிருக்கிறோம். முடிவு ஆவதற்கு முன்னாலே அதைப்பற்றி வெளியிடுவது அவ்வளவு சரியல்ல என்று நான் நினைக்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : நம் அரசாங்க என்சினியர்கள் அக்கட்டிடத்தின் விலை எவ்வளவு என்று கணிக்கிறார்கள் ? அந்தக் கட்டிடத்தை அரசாங்கம் எதற்காக வாங்க இருக்கிறது ? வாங்க அவசியம் இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : உதகமண்டலத்திலே இருக்கும் கட்டிடங்களிலே இது மிகவும் சிறந்த கட்டிடம். பல மாநாடுகள் அங்கு நடத்துவதற்கும், இப்பொழுது வெளியிலே வாடகைக் கட்டிடங்களில் இருக்கும் சில ஆபீஸ்களை வைப்பதற்கும் அது உதவியாக இருக்கும். ஒரு சமயம் நம்முடைய சட்டசபையைக் கூட கூட்டுவதாக இருந்தால் அங்கு ஏற்பாடு செய்வதற்கு வசதி இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Sri M. JAGANNATHAN : If that building is purchased, will the Government consider the desirability of holding the summer session of the Assembly there?

The Hon. Sri C. SUBARAMANIAM : அதைத்தான் தமிழிலே சொன்னேன். சபை இஷ்டப்பட்டால் அங்கு இட வசதி செய்வதற்கு முடியும்.

Sri N. K. PALANISAMI : ஊட்டியில் சட்டசபையை நடத்தும் விஷயமாக முடிவுக்கு வந்தாய்விட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது சபை முடிவு செய்ய வேண்டிய விஷயம். இதிலே சர்க்கார் தனிப்பட்டு முடிவு செய்வதற்கு ஒன்றும் இல்லை. அங்கத்தினர்களுடைய வசதியையும், அவர்களுடைய சௌகரியத்தையும் ஒட்டித்தான் ஏற்பாடு செய்யவேண்டியதாயிருக்கிறது. அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்வார்களானால் அங்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.